# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
# Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush, NSW 2140**
www.tsch.org.au info@tsch.org.au

## பேச்சுப்போட்டி 2020 மூன்றாம் வகுப்பு

அனைவருக்கும் வணக்கம்

### கல்வியின் சிறப்பு

செல்வத்திற் சிறந்த செல்வம் கல்விச் செல்வமாகும். கல்விச் செல்வமானது அழிவில்லாதது மட்டுமல்ல என்றும் நிலைத்து நிற்கக்கூடியது. எந்தவொரு செயலினாலும் அழிக்க முடியாது.

மனிதரிடத்துள்ள அறியாமையை போக்கி அறிவு ஒளி ஊட்டுவது கல்வி. கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு உண்டு. கற்றறிந்தவனே கண்ணுடையவனெனக் கருதப்படுவான்.

“எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்” என்று நம் முன்னோர் கூறியுள்ளனர். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் கற்க வேண்டியவற்றை கற்று, கற்ற நெறிப்படி ஒழுக வேண்டும். இதனையே வள்ளுவரும்

“கற்க கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்கு தக” என்றார்.

“இளமையில் கல்வி சிலையில் எழுத்து” என்னும் முதுமொழியை நாம் மறக்கக் கூடாது. எல்லா வித அழகுகளிலும் ஒருவனுக்கு கல்வி அழகே சிறந்த அழகாகும்.

நன்றி
வணக்கம்